DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous :
Sessions : SC 78/2020
Deposition of Witness for : PW 4

| | |
|---|---|
| Name. | திருமதி. காசியம்மாள் |
| Father /Husband Name | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 16.04.2025

**எதிரிகள் ஆஜர்.**

**CMP. 2/2025ல் பகரப்பட்ட உத்தரவுப்படி .அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகள் என் உறவினர்கள் என்றால் சரிதான். இறப்பிற்கு நான் செல்லவில்லை. இறந்துபோனவர் எனக்கு சித்தப்பா உறவு முறை. இறப்பில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வீட்டில் அ.சா.2 ஐ அடித்தபோது நான் வீட்டினுள் இருந்தேன் என்றால் இல்லை, வீட்டின் வெளியே தான் இருந்தேன். 1வது எதிரி எனது மகன். அ.சா.2 எனது பேரன். ஏற்கனவே அ.சா.2க்கும், எதிரிகளுக்கும் இடையே எவ்வித பிரச்சனையும் இல்லை. இறப்பில் அ.சா.1 மற்றும் 2 மது அருந்தி இருந்தனர் என்றால் இல்லை. சம்பவம் நடந்தபோது போவோர், வருவோர் பார்த்தனர். முதலில் எனக்கும், என் மகனுக்கும்தான் பிரச்சனை என்றால் சரிதான். அவர்தான் என்னை துரத்திவந்தார். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் செங்கல்பட்டு போலிசார் அன்றே என்னை விசாரித்தனர். மதுராந்தகம் ஏற்கனவே முதல் விசாரணை சாட்சியம் அளிப்பதற்க முன்பு விசாரித்தார்கள். எதனால் அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெிரயிாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தெரியும். அந்த ஆயுதம் சுமார் 5 அடி இருக்குமா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மற்ற மருத்துவமனைகளுக்கும் எப்பொழுது அழைத்துச் சென்றோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடைபெறும்பொழுது மணி எத்தனை இருக்கும் என்றால் சுமார் 9.00 மணி இருக்கும். 1வது எதிரிக்கு இடது கை பழக்கம் என்றால் இல்லை.

மறுவிசாரணை – இல்லை.